செப்பநித தானாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஹூ (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ஹூ ஆனி மீ கஉ உ வெள்ளிக்கிழமை (26-6-1970) [இல-கஉ

நேயர் நெஞ்சம்

### கல்விப் போதுத் தராதரப் பத்திர உயர்தர

# இந்துசமயப் பாடத்திட்டம் ஒரு விளக்கம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்குரிய இந்துசமயப் பாடத் திட்டம்பற்றி இந்துக்களிடையில் சரியான விளக்கம் உண்டாக வேண்டுமென்ற நோக்கத்துடன் இக் கடிதத்தை எழுதுகிறேன். சென்ற 4-6-70 இல் விவேகானந்த சபை 67-ஆவது வருடாந்தக்கூட்டத்திலே இந்தவிடயமாகச் சில குறிப்புக்களைக் கூறினேன். ஆனால் பத்திரிகைகள் பூரணமாக என் கருத்தை வெளிப்படுத்தாதபடியாலும், இலங்கையிலுள்ள இந்துசமயத் தாபனங்கள் என் கருத்துப்படி நிலைமையை நன்கு விளங்கிக் கொள்ளவில்லையெனத் தோன்றுவதாலும் எவருடைய மனத்தையும் புண்படுத்தும் நோக்கமின்றி இதை இந்து சமயத் தலைவர்கள் சிந்திப்பதற்காகச் சமர்ப்பிக்கிறேன்.

புதிய திட்டம் இந்துசமயம் என்ற தலைப்புடன் வெளியிடப்பட்டுள்ளது அதிலே இரண்டு வினாப்பத்திரங்களுண்டு. அது ஆங்கிலத்திலும் தமிழிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. "இப் பாடத்திற்குரிய வினாப் பத்திரங்கள் தமிழ் மொழியில் மாத்திரம் பெறக்கூடியதாயிருக்கும்", என அதன் ஈற்றில் ஒரு வசனம் காணப்படுகிறது. ஆனால் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்ட திட்டத்திலே இவ் வசனம்,

'Qrestion papers on this subject will be available only in the Tamil Medium' என்று காணப்படுகிறது. அதாவது தமிழ மொழி மூலம் பயில்வோரே இப் பாடத்துக்குரிய வினாப் பத்திரத்துக்கு விடை எழுதலாம். வேறு மொழியில் இப் பாடம் பரீட்சிக்கப்படமாட்டாதென்பது பொருள். அப்போது இத் திட்டத்தை ஆங்கிலத்திலே பிரசுரித்ததன் நோக்கமென்னவோ? ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்து இத் திட்டம் பிரசுரிக்கப்பட்டுள்ளதா? அல்லது தமிழிலிருந்து ஆங்கிலத்திற்குமொழி பெயர்க்கப்பட்டதா? எப்படியிருந்தாலும் தமிழ் மொழி பெயர்ப்பு ஆங்கிலத்தில் இல்லாத சில குளறுபடைகளையுடையதாயிருக்கிறதென்பதை இந்து சமயப் பரீட்சார்த்திகளின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

விவேகானந்த சபை வருடாந்தக் கூட்டத்திலே அச் சபையின் தலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை "இந்து சமயப் பாடத்திட்டம் சைவ சமய உண்மைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் மாறான அம்சங்களைக் கொண்டுள்ளதால் இப் பாடத் திட்டத்தை மறு பரிசீலனை செய்து உரிய வகையில் மாற்றும் வரை நடைமுறைக்குக் கொண்டு வரல் வேண்டாமென அரசாங்கத்தைக் கொழும்பு விவேகானந்த சபை கேட்டுக்கொள்ளுகிறது" என ஒரு பிரேரணையைக் கொண்டுவர இருப்பதாக அறிந்து அவரை நேரிலே சந்தித்து என் கருத்துக்களைச் சொன்னேன். அவர் பிரேரணையை மாற்றப்போவதாகக் கூறினர். அவ்வாறே மாற்றப்பட்டது. அந்த மாற்றத்தில் மாறான என்ற சொல்லுக்குப் பதிலாக வேறான என்ற சொல்லுப் போடப்பட்டிருந்தது. வேறெவ்வித மாற்றமுஞ் செய்யப்படவில்லை இது மூலப் பிரேரணையிலும் பார்க்க மோசமானதாக எனக்குப்பட்டது. ஏனிந்தக் கோமாளித்தனம் பண்ணுகிறார்களென்று நினைத்தே நான் பிரேரணையை எதிர்க்க வேண்டியதாயிற்று. பாடத்திட்டத்திலே வேறு என்ன தவறுகள் உண்டென திரு. ஆழ்வாப்பிள்ளையையும், சபையில் உள்ளோரையும் கேட்டேன். பாரதூரமான வேறு குறைகள் ஒன்றையாவது தலைவரோ மற்றையோரோ எடுத்துக் காட்டவில்லை. திட்டத்திலே தவறுகள் உண்டென்பதை நான் நேரத்தோடு ஒப்புக்கொண்டு அவற்றைத் தனிப்பட திரு. ஆழ்வாப்பிள்ளைக்கும் பின்னர் பகிரங்கமாகச் சபையோருக்கும் எடுத்துக் காட்டினேன்

திரு ஆழ்வாப்பிள்ளையின் பிரேரணையில் நான் கண்ட தவறு இது. புதிய இந்து சமயத் திட்டம் "சைவ சமய உண்மைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் மாறான அம்சங்களைக் கொண்டுள்ளது" என்பது திட்டத்திலே எந்தச் சமயத்தினதும் உண்மைகளோ, கோட்பாடுகளோ விதந்து குறிக்கப்படாதபடியால், சைவ சமய உண்மைகளுக்கும கோட்பாடுகளுக்கும மாறான விஷயங்கள் எப்படித் திட்டத்தில் இடம் பெற்றன? பெறவில்லையே! எந்த வகையில் திட்டம் சைவத்துக்கு மாறான உண்மைகளைக் கொண்டிருக்கிறது? என்பதே எனது ஆசங்கை. திட்டம தவறுடையதுதான் ஆனால் இந்த மாதிரித் தவறு திட்டத்தில் நான் காணவில்லையே அதை எனக்கு விளக்குவீர்களா? என்று கேட்டேன். அதற்கு ஒருவர் "சிவபெருமானுக்கு அவதாரங் கூறியிருக்கிறார்கள். அதைத்தான் நாம சைவ சமய உண்மைகளுக்கும கோட்பாடுகளுக்கும மாறானதென்றோம்" என்று கூறினர். அவதாரம் என்ற சொல் தமிழ் மொழிபெயர்ப்பிலேதான் காணப்படுகிறது. ஆங்கிலத்திலே 'manifestation' என்றுதானிருக்கிறது;

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடை
யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசி
யென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்
பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்த சுவாமிகள்

## ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் கோவில் மகா சங்காபிஷேகம்

4-7-70 சனிக்கிழமை பகல் 10 மணிக்கு ஷை ஸ்ரீ தேவி பூதேவி சமேத வேங்கடேசப் பெருமாளுக்கு நவோத்தர சஹஸ்ர சங்காபிஷேகம் நிகழும். இரவு 8 மணிக்கு புஷ்பவிமானப்புன்னைவிருக்ஷ உற்சவமும் நடைபெறும் ——

# காரைநகர்ச் சிவன் கோயில்

(ஈழத்துச் சிதம்பரம்)

சௌந்தராம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரசுவாமி

## ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் என்னும் ஸ்தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு திருவருளை முன்னிட்டு 10-7-70 வெள்ளிக்கிழமை சுபதினத்தில் காலை 8 மணி 35 நிமிஷம்முதல் 10 மணி 25 நிமிஷத்திற்குள் கும்பாபிஷேகம் நடைபெறும். மாலை 4-30 மணிக்கு நடேசர் உற்சவம். இரவு 8 மணிக்கு திருக்கல்யாணம், திருவீதி உலா. 3-7-70 வெள்ளிக்கிழமை பின்னிரவு கிரியைகள் ஆரம்பிக்கப்படும்.

பிரதிஷ்டா குருமார்: சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக்குருக்கள் சிவஸ்ரீ. சாமி விஸ்வநாதக் குருக்கள், யாழ்ப்பாணத்திலுள்ள வேதாகம விற்பன்னராகவுள்ள பல குருக்கள்மாரும பங்குபற்றுகின்றார்கள்.

## தில்லை நடராஜருக்கு வைர அங்கி

தில்லையம்பதி ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் "குஞ்சிதபாதத்திற்கு" ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் ஆஸ்திக பெருமக்களின் ஆதரவுடன் லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள 'வயிர அங்கி' தில்லையிலேயே செய்து இன்று (ஆனி 7ஆம் நாள்) காலை, புது பெரியவர் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களைக் கொண்டு ஸ்ரீ நடராஜமூர்த்தியின் குஞ்சிதபாதத்திற்கு வயிர அங்கியை சாற்றுபடி செய்து வைத்தார்கள் ஆஸ்திக மக்கள் பல பகுதிகளிலிருந்தும் வந்து கூடி வயிர அங்கி சாற்றுபடி நடைபெற்ற போது தரிசனம் செய்தார்கள்.

வயிர அங்கியின் விபரங்கள்:

'குஞ்சிதபாதத்திற்கு' செய்துள்ள வயிர அங்கியின் விபரங்கள் வருமாறு: மேல்பாகம் வெண்மை நிறமாக 534 வயிரங்களும், கீழ்பாகம் பச்சை நிறமாக 38 பச்சை கற்களும் பதிய வைக்கப்பட்டு குஞ்சித பாதத்திலுள்ள தண்டையில் சிகப்பு கற்களாலும். பாதசரத்தில் பச்சைக் கற்களாலும் பதிட வைத்து அழகுபடுத்தப்பட்டிருக்கின்றது.

-(எமது சிதம்பரம் நிருபர்)

திரு. மா பாலசுப்பிரமணியன்



பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

## அனுராதபுரம் ஸ்ரீ கதிரேசன்கோவில் உற்சவம்

28-6-70 ஞாயிற்றுக்கிழமை ஷை கோவிலில் மகோற்சவம் ஆரம்பமாகி பத்து நாட்களுக்கு நடைபெறும. பகலில் தினமும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும, இரவில சுவாமி திருவீதி உலாவரும் நிகழ்ச்சியும் நடைபெறும். (ந. கி.)

## பெரியபுராண விரிவுரைகள்

19-6-70 தொடக்கம் 5-7-70 வரை ஸ்ரீ வேதபுரீசுரர் வரதராஜப் பெருமாள் நால்நிலையத்தில் சித்தாந்த வித்தகர் கயப்பார்க்கம் திரு. க. சோமசுந்தரச்செட்டியார், Dr M. பாலசுப்பிரமணியம் M.D., பி. டி. ஜாந்தி B,A;L L B. ஆகிய மூவரும் பெரிய புராணம் பற்றி விரிவுரைகள் நிகழ்த்துவார்கள். ——

## நூல்சமர்ப்பண விழா

25-6-70 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மண்டபத்தில் "கணக்குப்பதிவும் கணக்கியலும்" என்னும் நூல் ஷை பாடசாலை பழைய உபாத்தியாயர் காலஞ்சென்ற பண்டிதர் வே. சுப்பிரமணியம் அவர்கள் ஞாபகமாக வெளியிடப்பட்டது. நூலாசிரியர் அன்னாரின் பழையமாணவன் திரு. சுப்பையா முருகேசு. கூட்டத்திற்கு நியாயவாதி திரு. எஸ் ஆர் கனகநாயகம் தலைமை வகித்தார். வைத்தியகலாநிதி க. கெங்காதரன்பிள்ளை, திரு. க. பேரம்பலம், பண்டிதர் சோ. இளமுருகனார் திரு. க. சிற்றம்பலம் முதலியவர்கள் ஷை வைபவத்திற் கலந்துகொண்டார்கள்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரண ௵ ஆனி ௴ ௧௨-௨ வெள்ளிக்கிழமை [1970]

## பெரியபுராண நூல் வெளியீடு

"பெரியபுராண நூல் வெளியீடு" என்ற தலைப்பில் யாழ். கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்புக் கழகத் தலைவர் திரு. சி. சிவகுருநாதன் எம். ஏ. அவர்கள் எழுதிய கட்டுரை சென்ற இந்துசாதன இதழில் வெளிவந்தது. இக்கழகம் முதற்பணியாக சேக்கிழார் நாயனர் புராணத்தை 1967ல் வெளியிட்டது. அதனையடுத்து "பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணம் - ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் உரையுடன்" வெளியிடப்பெறும் என்ற விளம்பரத்தை ஷ கழகம் வெளியிட்டது. அந்நூலை வெளியிடுவது சாமானியமான காரியமல்ல. அதற்குப் பெருந்தொகை நிதிதேவை. பணநெருக்கடியினுல் இப்பணி தடைப்பட்டிருந்தது திருவருட்டுணையுடன் ஷ நூல் இன்னும் ஓராண்டில் வெளிவருமெனக கழகத் தலைவர் உறுதி கூறுகின்றனர்.

பண்டிதமணி அவர்கள் தாம் அரிதிற் பேணி வைத்திருந்த ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள உரைப் பிரதிகளை கழகத்துககு அனுப்பி ஆசி நல்கியுள்ளனர். ஆறுமுகத்தம்பிரான் உரைநூம பிரதிகள மடிந்தொழிகின்ற நிலைமையிலுள்ளபடியினுல் அச்சுக்கோப்பவர்களுடைய வசதிக்காக அவற்றைப் பிரதிசெய்யும் கடமையும் பூர்த்தயாகிவிட்டது.

தமிழ்நாட்டில் திரு. C. K. சுப்பிரமணிய முதலியாருடைய பெரியவுரை வெளிவதற்குச் சென்னை அரசாங்கம், சென்னைப் பல்கலைகழகம், தருமபுர ஆதீனம் போன்ற ஆதீனங்கள், பிரபுககள் பொருளை மனமுவந்து நல்கினபடியால் அவ்வுரை சிறப்பாக வெளிவந்தது. யாழ். கூட்டுறவுத தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம் ஆரமபிக்கும் இத்தூய பணிககு சைவபரிபாலன சபை, இந்துமா மன்றம, விவேகானந்தசபை, ஆறுமுகநாவலர் சபை போன்ற சைவத் தாபனங்கள் முன்வருதல் வேண்டும். சைவ வள்ளல்களும் கோவிலதிகாரிகளும் இயன்றயளவு உதவிபுரிதல வேண்டும.

இதுவரை ஷ கழகம் சேக்கிழார் நாயனர் புராணம், காசிவாசி செந்திநாதையர் எழுதிய கந்தபுராணநவநீதம், திருக்குறிப்புததொண்ட நாயனர் புராணம - ஆறுமுகத்தமபிரான் உரை, அபிராமியந்தாதி - ம. க. வேற்பிள்ளை உபாத்தியாயர் உரை முதலிய நூல்களை வெளியிட்டிருக்கின்றது.

"மடாதிபகளும் அவரைச் சேர்ந்த வித்துவான்களும் உலகததாருக்கு விவேகம் உதிக்கும்பொருட்டு நல்ல நூல்களையும் உரைகளையும் செய்து வெளிப்படுத்தல் வேண்டும. பழைய நூலகளையும் உரைகளையும இறந்துபோகா வண்ணம பலதிறத்தாலும் சாவதானமாகப் பாதுகாத்தல் வேண்டும்"

—ஆறுமுகநாவலர்

இக்கழகம் படாடோபமின்றி அருந்தொண்டு புரிகின்றது. விரும்பியவர்கள் இக்கழகததில் உறுப்பினர்களாகச் சேர்ந்து அதன் பணியை ஊககப்படுததல் வேண்டும்.

வித்தியா தருமமே மேலான தருமம்.

## சிதம்பரம் ஸ்ரீ சிவகாமசுந்தரிசமேத ஸ்ரீ ஆனந்த நடராச மூர்த்தியின் ஆனித் திருமஞ்சன மகோற்சவம்

10-7-70 வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு ஆயிரக்கால் மண்டபத்தில் ஸ்ரீ ஆனந்த நடராஜ மூர்த்திக்கு மகாபிஷேகம் காலை 10 மணி வரை அலங்காரம். காலை 9 மணிக்கு சிற்சபை சிதம்பர ரகசிய பூசை. 12 மணிக்கு பஞ்ச மூர்த்திகள் வீதியுலா. ஆனந்த நடனக்காட்சி.

29-6-70 உற்சவம் ஆரம்பமாகும். ஸ்ரீ சிவகாமியம்பாள் சந்நிதி கும்பாபிஷேக நன்கொடை இல்லைத் திருப்பணி நன்கொடை திருப்பணிக் கமிட்டி பொக்கிஷதார் ஸ்ரீ சபாநாயகர் கோயில் சிதம்பரம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.

## கல்விப்போதுத்தராதரப்பத்திர உயர்தர இந்து சமயப் பாடத் திட்டம்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

தமிழ் மொழி பெயர்ப்புத் தவறு; அதைவிட்டு ஆங்கிலத்தைப் பாருங்கள். திட்டத்தைப் பொறுப்புணர்ச்சியோடு ஆராய வேண்டுமேயன்றி இப்படிச் சிறுபிள்ளைத்தனமாக மற்றவர்களில் குறை காணும் நோக்கமாக ஆராய வேணடாம். நீதியாயத்தோடு கண்டிக்க வேணடும். திட்டத்திலே உள்ள குறையை ஆராய வேண்டுமேயனறி அங்கேயிலலாததை எடுத்துக் கூறி மல்லுக் கட்டக்கூடாதெனச் சுட்டிக் காட்டினேன்.

சிலர் திட்டத்திலே சைவ சித்தாந்தததுககு போதிய இடமளிக்கப்படவில்லையென்றனர் இந்துமதக கருத்துககள் என்ற பிரிவில் வேதாந்தத்தில் வேதாந்தத் தத்துவம், வசிட்டாத் துவைதம, துவைதம் .................. என மூன்று வரியும ஒரு சொல்லும உண்டு. சைவ சித்தாந்தத்துக்கு 5 வரியும் ஒரு சொல்லுமுண்டு என எடுததுக் காட்டினேன் விசிட்டாத்துவைதம் மொழிபெயர்ப்பில் வசிட்டாத்துவைதமாகக் காணப்படுவது ஒரு வேளை அச்சுப்பிழையாயிருக்கலாம்.

திட்டத்தில் தேவார திருவாசகங்களுக்கு இடமில்லையென்ற கூச்சல் முன்னர் கேட்கப்பட்டது. "திருமுறைகளும் திவ்வியப் பிரபந்தங்களும" என்ற வாக்கியம் சமய நூல்கள் என்ற பிரிவில் திட்டத்தில் இருககிறது. அக்கூச்சலை விவேகானந்தசபையில் எவரும் எழுப்பவில்லை.

வேறுபல சில்லறை விஷயங்கள் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றுக்குச் சபையோரே சமாதானங் கூறி ஒத்துக் கொண்டனர். மொழிபெயர்ப்பிலே உள்ள சில தவறுகள் பின்வருமாறு 'Epics' என்பதற்கு காவியம் என்ற மொழிபெயர்ப்புத் தவறு இது ராமாயணம், மகாபாரதம் என்ற இதிகாசங்களையும் அவற்றிற் காணும சமயக் கோட்பாடுகளையும் தவிர்க்கச் செய்கிறது. காவியங்கள் வட மொழியில் வேறு. தமிழில் வேறு. பரீட்சார்த்தி எதில் உள்ள சமயக் கோட்பாடுகளைப் படிப்பது 'Text' என்பதற்கு 'பாட நூல்கள்' என்ற மொழிபெயர்க்கப்பட்டமை வேத ஆகம, காவிய, புராணங்களையும் ஏனையவற்றையும் பாட நூல்களாக்குகின்றது. 'Manifestation' - என்பதற்கு அவதாரம் என்ற மொழிபெயர்ப்புப் பொருத்தமில்லை. அதனுலே தான் விவேகானந்த சபையினர் பிரேரணையைக்கொண்டு வர வேண்டியிருந்ததென எனககுப்புலப்படுகறது. அவர்கள் வேறு காரணங்களை இதுவரை காட்டவில்லை. 'attribute' என்பதற்குச் சார்த்திக் கூறப்படும் என்று மொழிபெயர்ப்பது பொருத்தமில்லை.

'vartious paths' என்பதற்கு வழிமுறைகள் என்று மொழி பெயர்ப்பது சமயப் பரிபாஷை தெரியாததால் வந்த குறை. 'Theory of Karma' கர்மம் பற்றிய விதி என்று மொழிபெயர்க்க வேண்டியதில்லை; கர்மக் கொள்கை எனலாம். 'the impact of other religions on Hinduism' - இந்துமதத்துடன் ஏனைய மதங்களின் மோதல் என மொழிபெயர்ககப்பட்டிருக்கிறது. மோதல் என்பதிலும் பார்க்க பதிவு, செல்வாக்கு என்ற சொற்கள் பொருத்தமாயிருக்கும். இந்து மதத்தில் வேறு மதங்கள் பதிதல், அல்லது இந்து மதத்தில் வேறு மதங்களின் செல்வாக்கு என மொழி பெயர்க்கலாம். 'Grace of God' என்பதற்குக் கடவுளின் கிரிபை என்பதிலும் பார்க்க திருவருள் என எழுதலாம் 'attainments of Bliss' என்பதற்கு பேரானந்தப் பேறுகள் என்று மொழி பெயராது முத்தி நிலை எனலாம. 'Purificati-on எனபதற்கு சுத்திகரிப்பு என்ற மொழி பெயர்ப்புப் பொருந்தாது பரிபாஷையில மலபரிபாகமெ றே வழங்கும் என எண்ணுகிறேன். "இருவினை ஒப்பு, மலபரிபாகம் என்றதொடர் கவனிக்க" பஞ்சாட்சரம், ஐந்தெழுத்து என்பனவே வழக்க; இங்கே பஞ்சாட்சரங்கள் எனததிட்டத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது

'Neo Hinduism' என்பதற்கு நவீன இந்துமதப் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது அது பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது இராமகிருஷ்ணர், விவேகானந்தர், மகாத்மா காந்தி ஆகியோர் புதிதாக என்ன இந்துமதத்தைத் தாபித்தனர் எனச் சொல்லின் உருவத்தைக்கண்டு ஆரவாரம் அடைந்தவர்களுக்கு சபையிலே ஒரு விளக்கங்கொடுத்தேன். அதாவது மேற்கூறிய மகான்கள் இக் காலத்தில் வாழ்ந்த இந்துமதப்பெரியார்கள். அவர்கள் புதிய விளக்கங்களைத்தந்து பழைய சனுதனதாமத்தை இன்றைய வாழ்வுக்குப் பொருளுடையதாக்கினர் என்று; சபையினர் ஆட்சேபிக்கவில்லை. இலங்கையிலே சைவ சித்தாந்தமரபு பெருவழக்காய் வந்தபடியால் அதனை விசேடமாக மாணுக்கர் அறிவது பெரிதும் பொருத்தமுடையதே அனுல் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளையின் புதிய திருத்தப் பிரேரணையில் சைவ சமய உண்மைகளுக்கும் கோட்பாடுகட்கும் வேருன அம்சங்களை (திட்டம்) கொண்டுள்ளதால்" அதைக் கண்டிப்பது அறிவுடைமையாகாது அதையே நான் கூறிப் பிரேரணையைக் கண்டிததேனே அன்றி புதிய திட்டத்தை ஆதரிப்பதறகாகக கண்டிக்கவில்லை. புதிய திட்டம் கருத்தோடு அமைக்கப்படவில்லையென்பது இங்கே எடுத்துக் காட்டியவற்றுல் ஓரளவுபுலனுகும். புதிய திட்டத்திலே தருமசாத்திரங்களைப் பற்றியும் குறிப்பிட்டால் நன்று இதை இந்துக்கள் மனத்தி விருத்தி யேன்மை கொள் சைவநீதியை நமது பிற்காலச் சந்ததியினர் உணர்ந்து கொள்ள வழிசெய்வாராக.

இங்கே கூறப்பட்டவை எவர்மீது குறைசுமத்தும் நோக்கமாகக் கூறப்படவில்லை. விஷயத்தை விளக்கவும், எனது கருததைத் தெளிவுபடுத்தவுமே கூறப்பட்டன, திட்டத்தை வாசியாதே கண்டனந் தெரிவிக்கும் ஒரு பழக்கம் நம்மவரிடையே இருக்குமானுல் அது தவிர்க்கப்படவேண்டும். திட்டத்திலுள்ள குறைகளை அதை அமைத்தோருடன் கலந்து ஆலோசித்துப் பூரணப்படுத்தலாம். அவலை நினைத்து உரலை இடிக்க வேண்டாமே. அதனுல் யாருக்கு நன்மை?

இங்ஙனம்
சோ. நடராஜன்
நவாலியூர். 22-6-70

## கூற்றைவெல்லவழி?

[கலி விருத்தம்]

கூகா என்று
குரைப்பதல் லாற்சமன்
வா வா என்னின்
வரேமென வல்லிரே
தேவே சன்பயில்
தில்லையின் எல்லையில்
சேர்வீ ரேலது
செய்யவும் வல்லிரே!

—சிதம்பரச்செய்யுட்கோவை.

கூகா என்று இரைச்சல் போடுவதை அல்லாமல் எமதர்மன் உம்மிடம் வந்து வா வா என்று அழைக்கும் வேளையில் "வரமாட்டேர்ம்" என்று சோல்லுவதற்கு தீர் வல்லமை உடையீரா? தேவர்கள் தலைவனுகிய கூத்தப்பெருமான் வீற்றிருக்கின்ற தில்லைத் திருப்பதியின் எல்லையில் சென்று சேருவீர்களானுல் அங்ஙனம் "வரமாட்டோம்" எனக் கூறுதற்கும் வல்லவராவீர்.

## பித்தன்

(3-ம் பக்கத்து வளர்ச்சி)

களுக்கு அருள்செய்யவேண்டி 'பித்தன்'போல் திரிவதால் சிவபிரானைப் பக்தர்கள் பித்தன் என்று அழைத்துத் துதிப்பாராயினர். சிவபெருமான் பெரும் கிருபாநிதி. நாம் அவனை நோக்கி ஒரு அடி எடுத்துவைத்தால், அப்பெருமான் நம்மை நோக்கி நூறு அடி எடுத்து வைத்து வருகின்றுன். என்னே அவன் கருணை! அன்பர்களின் தூய அன்பைக் காட்டிலும், சிவபெருமானின் பேரன்பு சிறந்தது.

"தீர்ந்தஅன் பாய அன்பர்க்கு
அவரினும்
அன்ப போற்றி"
என்பது திருவாசகம்,

—'குமரகுருபரன்' 15-5-70

[வளரும்]

## திருவானைக்காவல் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஸமேத ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் ஆலயம்

காவிரி ஆற்றின் நடுவிலுள்ள பாடல்பெற்ற இப்புண்ணிய தலம் பெருந்தொகை நிதிசெலவு செய்து திருப்பணி புதுப்பிக்கப்பட்டுள்ளது. மகாகும்பாபிஷேக நிகழ்ச்சிகள் 1-7-70 ஆரம்பமாகி 5-7-70 பூர்த்தியாகும. அன்று பிற்பகல் 8 மணி மகாபிஷேகமும் இரவு திருவீதி உலாவரும் காட்சியும் நிகழும்

# பித்தன்

திரு. ஜெ. மகாதேவன் அவர்கள் சென்னை 21.

ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாதவனுன சிவபெருமான் உயிர்கள் உய்வதற்காக ஆயிரம திருநாமங்களைக் கொண்டு விளங்குகின்ருன். 'பித்தன்' என்னும் திருப்பெயர் அவனது திருநாமங்களில் மிகச் சிறந்தது. பித்தா என்று கூறி பெண்ணேர் பாகனைத் தொழுவோர் வல்வினைகளினுல தன்புருமல் இன்பமாக வாழ்வர்,

"பெண்ணேர் பாகா பித்தா
பிரானே யென்பார்க்கு
நண்ணு வினைகள்
நாடோறும இன்பம்
நணுகுமே"

என்பார் திருஞானசமபந்தர்

பித்தன் என்ருல் அளவற்ற கருணையை உடையவன் என்பது பொருள். இதனை 'பெற்றமனம்பித்து, பிள்ளை மனம் கலலு' என்ற பழமொழியே நலகுணர்த்தும். தாயானவள் தன் மகன் தடிகொண்டு தன்னைத் தாக்கிடினும், அவன் மிடியின்றி வளமுடன் வாழவே விருமபுவாள்; அதற்காக ஓயாது பாடு படுவாள். இறைவனை இறைஞ்சுவாள். ஆனல் பிள்ளையோ தாயின் அனபை உணராமல், கல்போன்ற மனம் இரங்காமல் பலவாறு தாயைத் துன்புறுத்துவான் தாயின் பெருங் கருணையை உலகுக் குயர்த்தவே மேற் சொன்ன பழமொழி எழுந்தது.

அறியாமையால் சிலர், பித்தன் என்று சிவபெருமானை இகழ்ந்து பேசிச் சிவநிந்தனை புரிகின்றனர் அவர்களுக்கு எல்லாம் வல்ல ஆண்டவன்தான் அருள் செய்ய வேண்டும். காந்தி அடிகள் தமது சத்தியத்தைச் சோதனை செய்தது போல் நம்மை நாமே உள் முகமாகச் சோதித்துப் பார்த்தால் நாமும பித்தர்களே (பைத்தியக்காரர்கள்) என்பது புலப்படும். நம்மில் பலர் பெண் பித்தர்களாகவும, பொன் பித்தர்களாகவும், மண் பித்தர்களாவும் இருக்கின்றனர். உலகத்தில் உள்ள எல்லோரும் ஒவ்வொரு வகையில் பித்தர்களே.

பித்தேலா முடையவுலகர்தம்
கலகப் பிதற்றேலா
மென்றெழுந் திடுமோ
சத்தேலா மொன்றென்
றுணர்ந்த சன்மார்க்க
சங்கமென் றேங்குமோ
தலைமைச் சித்தேலாம் வல்ல
சித்தனென் றுறுமோ
தேர்ந்திலே னெனத்
துயர்ந்திருந்தேன்
ஒத்தேலாம் உனது திருவுளம்
அறிந்தது உரைப்பதேன்
அடிககடி யுனக்கே

என்பார் இராமலிஙக அடிகள்.

தாயைக்காட்டிலும் தயையுடையோனுகிய இறைவன் உயிர்கள் புரியும குற்றங்களைப் பொறுத்து, அவற்றின் குணங்களாகக் கருதி அருள் செய்கின்ருன்

"குற்றம்புரிதல் எனக்கியல்பே
குணமாகக் கொள்ளல்
உனக்கியல்பே
சிற்றம் பலவா இனிச்
சிறியேன்செய்யும் முகமன்
யாதுளது"

என்று வடலூர் வள்ளலாரும்,

"ஏது பிழை செய்தாலும்
ஏழையேனுக்கு இரங்கி
தீது புரியாத தெய்வமே"

என்று திருப்போரூர் சிதம்பர சுவாமிகளும்,

"குற்றம் செய்யினும் குணம்
எனக் கருதும்
கொள்கை கண்டுநின்
குரைகழல் அடைந்தேன்"

என்று சுந்தரரும்,

'வெறுப்பன வேசெய்யும்
என்சிறுமையை நின்
பெருமையினுல்
பொறுப்பவனே........"

என்று மாணிக்கவாசகரும்,

"பித்தனேன் பேதையேன்
பேயேன் நாயேன்
பிழைத்தனகள் அத்தனையும்
பொறுத்தாய் அன்றே
இத்தனையும் எம்பரமோ
ஐய ஐயோ
எம்பெருமான் திருக்கருணை
இருந்த வாறே"

என்று அப்பர் சுவாமிகளும் ஆண்டவனின் அளப்பரும் கருணையைப் போற்றுகின்றனர் எங்கே மெய்யன்பர் உளர்? எனத்தேடி அவர்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## காசிக்ஷேத்திராடனம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25 ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சியை ஏற்று 25 ஆண்டு நிறைவு 'வெள்ளிவிழா' நடைபெற்று ஆனி 4-ம் நாள் குருவாரத்தன்று காசிக்ஷேத்திராடனம் செய்யவா புறப்பட்டுச் சென்றுள்ளார்கள்.

(எமது சிதம்பரம் நிருபர்)



## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B 6897.

1. எட்வேட் தோமஸ் நவரத்தினம் தைரஸ் உள் பெண்
2. பூமலரும் இருவரும்

14/1 ல் லெற்ஸர் ஒழுங்கை சுண்டிக்குளி யாழ்ப்பாணம் தற்பொழுது 4/3 அலெக்ஸான்ரு ரேட் வெள்ளவத்தை கொழும்பு —வழக்காளிகள்.

எதிராக

1. அம்பலவாணர் நவரத்தினமும் பெண்
2. அன்னலட்சுமியும்
3. கந்தையா வெற்றிவேலுவுர் பெண்
4. மாணிக்கமும் எல்லோரும கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் —எதிராளிகள்

யாழ்ப்பாணக் டிஸ்திறிக் கோட்டின் M B 6897 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970-ம ஸு ஆவணி மீ 15-ஆம் உ (15-8-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: — முதல் வட்டி ரூபா 4491-20-ம் 20-9-59 தொடக்கம் 4-5-67 வரைக்கும் ரூபா 3000 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 425-50 இன்னும் 20-5-68, 18-5-69, 22-8-70 தேதிகளில் வெளிப்படுத்திய கொமிஷனர்கள் முத்திரை செலவு ரூபா 27-00 செலவில் ரூபா 125/-ம் முதலில் ரூபா 2500/- இரண்டாம வளக்காளி 2-5-69 ல் பற்றியதையும் இவ் வளக்கு வரவுக்கு கட்டப்பட்டுள்ள ரூபா 600-ம் கழியடவேண்டும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சுண்டிக்குளியிறை "புளியடியிற் புலமும் புளியடியிற் கலட்டி தண்மலை பூ த் தோட்டம் எனனும் தெரியப்படுள்ளது மா நில இல 2 — 0 இலக்கம் 118 கொண்ட படத்தில் 4-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது ஷ படத்தில் A" "B" என்று காட்டப்பட்டிருக்கும் துண்டுகள் ஊடாக செலலும் வில்மட் செல்லையா சந்திரபாலோ பெண் றேஸலின் தங்கரத்தினம ஜோஸப் எப் மாட்டின் பெண் ஆகியோருக்கு முளு உரிமையுள்ள ஒழுங்கையில் 4ம் துண்டுக்கு நடைபாதை உருத்துடைய இதற்கெல்லை கிழக்கு ஷ படத்தில் வில்மட் செல்லையா பெண் தங்கரத்தினம் ஆகியோருக்குரிய 5-ம் துண்டுக் காணி. வடக்கு ஒழுங்கையும் ஷ படத்தில் "A" "B" என்று காட்டப்பட்டுள்ள துண்டுகளும். மேற்கு இளையதம்பி சடையர் பெண்ணுக்குரிய ஷ படத்தில் மூன்ரும் துண்டாகக் காட்டப்பட்டுள்ள காணி தெற்கு க. சபாபதிக்குரிய காணி பதிவிலக்கம் D 271/62

14, டேவிற் வீதி, யாழ்ப்பாணம், 31-5-70

அ. போ. எதிர்மணசிங்கி
கொமிஷனரும் விலமதிப்பாளரும்.
எம் 92 12-6-70.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல: M B 9048

கெ முழ்புத்தறை, யாழ்ப்பாணம ராமலிங்கம் செல்வராஜா —வழக்காளி

எதிராக

கொட்டடி, யாழ்ப்பாணம். அம்பலவாணர் மாரிமுத்து கைம் பெண் ராசம்மா — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9048-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970 ம் ஸு ஆவணி மாசம் 5-ம் திகதி (5-8-70) புதன் கிழமை முற்பகல் பகது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 8594/- இன்னும் ரூபாய் 5000/-க்கு 4-5-67 தொடக்கம் 13-6-68 வரைக்கும் 10 வீதவட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 333-40 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணுர்பண்ணை கோவிற்பற்று வண்ணுர்பண்ணை தென்மேற்கிறை 'பல்லுவிளித்தோட்டம்" பரப்பில இலா. 8 4 குழி கல்வீடு செய்பயிர் வான் பயிர்களுடன் இன்னும மதைச் சேர்ந்தவைகளும் இதற்கெல்லை கிழக்கு - ஆறுமுகம் கைம்பெண் இரத்தினதங்கனுதனம், வடக்கு நவரெத்தினம பெண் வித்தியலட்சுமியினுதனம், மேற்கு நமசிவாயம் கைம்பெண் செல்லாச்சியினுதனம். தெற்கு ஒழுங்கை இதுடங்கலில் பிரிவிடப்படாத ½ பங்கு.

செ. விசாகரெத்தினம்
கொம்மிஷனர்& விலமதிப்பாளர்.
133 பருத்தித்துறை றேட்டு.
நல்லூர் யாழ்ப்பாணம், 20-6-70
எம். 113 26.6.70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. காலஞ்சென்ற வேலப்பர் கணபதிப்பிள்ளையின்
2. பெண் சின்னுச்சிப்பிள்ளை, புலோலி தெற்கு. பருத்தித்துறை தனிப்பட்ட சார்பிலும், இறந்த வழக்காளியின் சொத்தின் பிரதிநிதியென்ற சார்பிலும்.

இல: M B. 9912 எதிராக —வழக்காளி

1. வயிரமுத்து கணபதிப்பிள்ளையும் மனைவி
2. பரமேஸ்வரி இருவரும். 29, ஸஸ்கொதின் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு. —எதிராளிகள்

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டின் M B 9912ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும ஐந்து துண்டுக்காணி 1970—ம் ஸு ஆடிமாதம் இருபத்தேழாம் திகதி (27—7—70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 7213—89 சதம் மேலும் 6—4—68 தொடக்கம் 18-10—68 வரைக்கும் ரூபா 5,000/-த்துக்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 376-50 சதம அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 245—40 சதம வெளியாத்துச் செலவு ரூபா 71 00 இனிமேல் வரும் செலவு ரூபா 60—10 சதம்.

ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் பச்சிலைப்பள்ளிப்பகுதி முள்ளிப்பற்று தரபகாமம் கோவிற்பற்று மசார்ஞகாவில் இறை "கள்ளிக்கரைக்காடு" பரப்பு அரை ஏக்கர் பருத்தித்துறை லாந்தா கே. வேல்முருகு அவர்களால 28—9—1957ல் 3280ல் இலக்கத்தில தயாரிக்கப்பட்ட படத்தின்படி லொட் ஏழு எனக் குறிக்கப்பட்ட பிரிக்கப்பட்ட துண்டு இதற்கு எல்லை வடக்கு குறித்த படத்தில் லொட் இலக்கம் எனக் குறிக்கப்பட்ட துண்டு, தெற்கு குறித்த படத்தில் லொட் 6 எனக் குறிக்கப்பட்ட துண்டும், கிழக்கு தெரு, மேறகு குறித்த படத்தில் 23 எனக் குறிக்கப்பட்ட துண்டுக்காணி B. 54/185ல பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

(2) மேற்படி கள்ளிக்கரைக்காடு குறித்த லாந்தாவினுல் தயாரிக்கப்பட்ட சொல்லப்பட்ட படத்தின் பிரகாரம் அரை ஏக்கர் விசாலம் பிரிக்கப்பட்ட நிந்தமான காணி, லொட் 8 எனக் குறிக்கப்பட்ட இதற்கெல்லை வடக்கு குறித்த படத்தில் 9 எனக் குறிக்கப்பட்ட துண்டு, தெற்கு மேற்படி படத்தில் லொட் 7 எனக் குறிக்கப்பட்ட துண்டு, கிழக்கு தெரு, மேற்கு R 3 எனக் குறிக்கப்பட்ட துண்டு, B. 54/186ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(3 மேற்படி இறை "கள்ளிக்கரைக்காடு" குறித்த படத்தில் 7 F எனக் குறிக்கப்பட்ட துண்டு விசாலம் ஒரு ஏக்கர் 3 றூட் டுகள் 15 பேச்சஸ் இத்துடன் 28-9-1957ல் மேற்படி லாந்தாவினுல் தயாரிக்கப்பட்ட படத்தில் R 1. R 2, R 3, R 4, எனக் குறிக்கப்பட்ட துண்டுகளில் 1/40 பங்கும் 25—9—57 ல் சீ. கந்தையா லாந்தாவினுல் தயாரிக்கப்பட்ட 375ம் இலக்கப் படத்தில் 3 எனக் குறிக்கப்பட்ட துண்டில் 1/80 பங்கும் இதற்கு எல்லை வடக்கு சிறுகலி, தெற்கு முதல் குறித்த படத்தில் R 4 எனக் குறித்த துண்டு கிழக்கு 6 F எனக் குறிக்கப்பட்ட துண்டு மேற்கு F 7A எனக்குறிக்கப்பட்ட துண்டு B 49/130 பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(4) மேற்படி மசார் வண்ணுர்கேணி இறை கள்ளிக்கரைக்காடு மேற்படி படத்தில் F 7a எனக் குறித்த துண்டு 2 ஏக்கர் 2. றூட், 11½ பேர்சஸ் 28—9—57 -ல் 3280-ஆம் இலக்கப் படத்தின்படி இதற்கு எல்லை வடக்கு சிறுகாலி, தெற்கு குறித்த படத்தில் R 5 எனக் குறித்த துண்டு, கிழக்கு F 7 எனக் குறிக்கப்பட்ட துண்டு. மேற்கு F 8 எனக் குறிக்கப்பட்ட துண்டு. இத்துடன் R 5 எனக் குறிக்கப்பட்ட துண்டில் 1/40 பங்கும். B 49/131ல் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது

(5) மேற்படி மசார் வண்ணுர்கேணி இறை கள்ளிக்கரைக்காடு படத்தில் 8F எனக் குறிக்கப்பட்ட துண்டும் சொல்லப்பட்ட படத்தில் R 1, R 2, R 3, R 4, R 5 எனக் குறிக்கப்பட்ட துண்டுகளில் 1/40 பங்கும் விசாலம் 4 ஏக்கர் 1 றூட் 26½ பேர்சஸ் இதற்கு எல்லை வடக்கு சிறுகாலி, தெற்கு குறித்த படத்தில் R5 எனக் குறிக்கப்பட்ட துண்டு கிழக்கு F 7a எனக் குறிக்கப்பட்ட துண்டு மேற்கு F 9 எனக் குறிக்கப்பட்ட காணி

சி. செ. பாலசிங்கம்
அராலி வடக்கு, கொமிஷனரும் விலமதிப்பாளரும்
வட்டுக்கோட்டை. 22-6-70 [எம். 121 26—6—70]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டில்

வட்டுக்கோட்டை மேற்கு வயித்திலிங்கம் சபாரெத்தினம்

இல. M. B. 10231 எதிராக —வழக்காளி

1 வட்டுக்கோட்டை கிழக்கு இளையதம்பி செல்லையா
2 ஷ யூர் பாக்கியலெட்சுமி —எதிராளிகள்

யாழ்ப்பாணம டிஸதிறிககோட்டின் M. B. 10231-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும ஒரு துண்டுக்காணியை 1970- ஆம் ஸு ஆடி (ஜூலை மீ 27-ம திகதி (27—7—1970) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 13 675/-ம், 23-8-68 தொடக்கம் 11-4-69 வரைக்கும் ரூபாய் 10,000/—க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 460-32 சதம் இதில் ரூபா 250/- கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை 'பதகனி" உறுதிப்படி பர. கி. லா 11. இது உத்தரவு பெற்ற லாந்தா 8 முதலுக குமாரசுவாமியால் 1961-ம் ஸு மார்கழி மீ 26-ம் திகதி 1005ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட அளவுப் படத்தின்படி பர. கி. இலா 10 ஓடி 2 இதில் கிழக்குப் பக்கமாக 1ம் துண்டாகக் காட்டப்பட்ட பர. கி. இலா. நாலு (பர. கி. இலா. 4) இணறும் செய்பயிர் வான்பயிர்களும் வீடும், எல்லை கிழக்கு - நடராசா பெண் சட்சாஸ்வரிக்குரியவாதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு வேலுப்பிள்ளை செல்லையா துரையப்பாவின் ஆதனம், தெற்கு நடராசா பெண் சட்சாஸ்வரிக்குரியவாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட காணியடங்கலும்.

இதன்பதிவு B, 376/122
காரைநகர் வை. ஏரம்பமூர்த்தி
1970—ஆம் ஸு வைகாசி மீ 30-ம் திகதி. ஏல விற்பனையாளரும்.
எம். 117 26—6—70 விலமதிப்பாளரும்.

## இலங்கை பொறியியற்பகுதியாளர் சங்கம்

—0—

இச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் 21-6-70 அன்று நடைபெற்றது. புது வருடத் தலைவராக திரு G. V. குணவர்த்தன தெரிவு செய்யப்பெற்றனர். காரியதரிசியாக திரு. கு. சுந்தரலிங்கம் தெரிவு செய்யப்பெற்றனர். திரு. கு. சுந்தரலிங்கம் இந்துக்கல்லூரிப் பழைய மாணவன். யாழ்ப்பாணம் பிரபல வியாபாரி திரு மூ. குமாரசாமிப் பிள்ளை அவர்களின் புத்திரனுவார்.

தபாற் பகுதி மந்திரி திரு. செ. குமாரசூரியர் குறிப்புரை கூறினர். இலங்கை பொறியியலாளர்கள் தங்கள் கடமைகளை செவ்வனே புரிந்து தங்கள் இனத்தினதும், நாட்டினதும் நலனுக்கு உழைப்பார்களெனத் தாம் எதிர்பார்க்கிறதாகக் குறிப்பிட்டனர்.

## நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B, 8939

1 விஞ்சித்தம்பி முருகேசு பரமநாதன் பெண்

2 கமலாம்பிகை, வலந்தலை, காரைநகர் வடக்கு

—வழக்காளிகள்

எதிராக

1 வேலு சண்முகம் பெண்

2 சேதுப்பிள்ளை,

அரசடி ரோட், வண்ணார்பண்ணை கிழக்கு. யாழ்ப்பாணம்.

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B- 8939ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970-ம் ஞூ ஆடி மீ 20-ஆம் திகதி (20–7–70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 6320/-ம் 6-3-67 தொடக்கம் 22-8-67 வரைக்கும் ரூபாய் 4000/-கு 12 விதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 323-15

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணப் பகுதி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை "நீரநீவி அடி அல்லது நீரகொச்சியடி" நில. பர. 30 இதை உத்தரவு பெற்ற அளவையாளர் J. D. வீரசிங்கத்தினுல் 26-1-1948ல் தயாரிக்கப்பட்ட நம்பர் 2442ம் படத்தின் 11-ம் துண்டு நில. பர. 2 இந்த நில பர. 2ம் லொட் நம்பர் 10ல் உள்ள கிணற்றில் இதற்கான பங்கும் அதற்குரியவைகளும் 15ம் துண்டால் வழியுரிமையும் 15ம் துண்டிலிருந்து தெற்குப் பக்க ரோட்டுக்குப் போகும் ஒழுங்கையும், ஆனல் 16ம் துண்டிலுள்ள கிணற்றுப் பங்கு புறநீங்கல், இந்த நில. பர. 2 எல்லை கிழக்கு வைத்திலிங்கம் கதிரவேலுவின் ஆதனம், வடக்கு: லொட் 10 மேற்கு: கையொழுங்கை படத்தின்படி லொட் 15 தெற்கு படத்தின்படி லொட் 12. 16ம் துண்டின் வட எல்லை வேலியும் 16ம் துண்டின் மேற்குப்புற ஒழுங்கையும் கிழக்கு மேற்கு வேலிகளும் 16ம் துண்டுக் காணியின் சொந்தக்காரர்களுக்கு பிரத்தியேக உரிமையுள்ளது.

பதிவிலக்கம் D 246/116

சு. கந்தசாமி
கொமிஷனர் & விலைமதிப்பாளர்.
19, சுவாமியார் வீதி
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்
M, 122 26—6—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தாவடிமாசட்டு 1. முனியாபிள்ளை தாமோதரம்பிள்ளையும மனைவி
2. ஜெயலட்சுமியும் — வழக்காளிகள்

இல: M. B. 10514 எதிராக

யாழ்ப்பாணம். அம்மன் தெரு, கணபதிப்பிள்ளை தம்பையா

—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10514 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஞூ ஆடி மீ 17-ந் திகதி (17-7-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில்விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 4630-33 சதத்தில் 3-1-69தொடக்கம் 25-11-69 வரைக்கும் ரூபா 3000/-க்கு 10% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் 25-11-69ல் இருந்து இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 411-09 சதம் வட்டியின் பெயரில் ரூபா 950/- கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பிரிவு வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு வண்ணார்பண்ணை இறை "கம்பன் புலமும் பாவட்டன் காடும்" நிலபபரப்பு 3ம, 5 குளியும், மண் வீடும், வான் பயிர்களும் எல்லை கிழக்கு:- வேலுப்பிள்ளை சுந்தரத்தினதும், காசிப்பிள்ளை கார்த்திகேசுவினதும் ஆதனம், எல்லை வடக்கு: தெருவு, எல்லை மேற்கு: ஒழுங்கையும், எல்லை தெற்கு: சரவணமுத்து முருகேசுவினதும் பெண் பாக்கியத்தினதும் ஆதனம். இவற்றில் சொரியலாக அரைப்பங்கு.

"வடிவேல் உதயம்" சி. ஆ த. வடிவேலு J. P.
காங்கேசன்துறை வீதி, கொமிஷனரும், விலை மதிப்பாளரும்
கோண்டாவில், ஏலவிற்பனையாளரும்:
20-6-70 எம் 116 26—6—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கரம்பொன் கிழக்கு,

1 வயித்திலிங்கம் தியாகராசா பெண் ஈஸ்வரியும்

2 வைத்திலிங்கம் தியாகராசாவும்

Insolvency நல்குரவு } 5 —மனுக்காரர்கள்

ஊர்காவற்துறை கரம்பொன் கிழக்கு

ஆறுமுகம் சுப்பையா நடராசா, தனமிழந்தவர்
ஊர்காவற்துறை சுருவில், V மாணிக்கம் கைம்பெண் யோகம்மா

—ஈடுகொடுத்தவர்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 5ம்இலக்க (Insolvency) நல்குரவு வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ம் திகதி (3-8-70) திங்கட்கிழமை முற்பகல் 9-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

முதல் ரூபா 5000/- மேலும் ரூபா 5000/-க்கு 12 வீத வட்டி 20-6-66 தொடக்கம் 25-5-70 வரையும் கூடிய தொகைக்கு 25-5-70 தொடக்கம் இறுக்கும்வரை 5வீதவட்டியும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி, ஊர்காவற்துறை கோவிற்பற்று காரம்பன் இறை வேப்பந்திடல் நி. பர 25 இதில் வடமேற்குப் பக்கமாகச் சீதனம் கொடுத்த நி பர. 5 நீக்கி மீதி நி. பர. 20 (இருட்டும்) கிணறும் மற்றும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு: பொன்னையா கைம்பெண் சவிரியாசசிக்கும் தம்பிமுத்து சிவகுருவின் உரிமைக்காரருக்குமுரிய ஆதனங்கள் வடக்கு கணபதி மகன் மாரிமுத்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்களும், வைரவர் கோவிலாதனமும் மேற்கு: தியாகராசா பெண் ஈஸ்வரிக்கும், வைரவர் கோவிலுக்குரிய ஆதனங்களும், ஒழுங்கையும், தெற்கு: சின்னப்பா கைம்பெண் மீனுட்சியினுரிமைக்காரினுதனம இதடங்கலும்.

S இரத்தினசபாபதி, J. P
வீரேசன் ரோட், நியாசதாரி Assignee.
கோண்டாவில், 17-6-70 எம 115 26-6-70

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 10259

1. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை கைம்பெண் நாச்சிப்பிள்ளை துன்னுலை தெற்கு —வழக்காளி

எதிராக

வேலுப்பிள்ளை இராசையா, கரவெட்டி கிழக்கு —எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1970 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் திகதி (10—8—1970) திங்கட்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று கரவெட்டி வெள்ளிக்குறிச்சியிறை முள்மருதன்சீமா நி பர, 6, 5/8 இதை நங்களும் பங்காளரும் பிரித்து ஆட்சிசெய்தபடி மேற்குப் பாகமாக அரைவாசிக்கு நி. பர. 3, 5/16 (மூன்றுடன் பதினறிலைந்து) பரப்புக்கு எல்லை: கிழக்கு. வீரகத்தி பெண் தெய்வானைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு – வேலுப்பிள்ளை கந்தையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு – தெரு, தெற்கு – இக்காணியிலிருந்து விடப்பட்ட ஒழுங்கை, இவ்வெல்லைக்குள்ளிருக்கும் வீடு நிந்தமாகவும் நிலம் பயிர் அடங்கலும், (மதிப்பிட்ட விலை ரூபா 6293-75 சதம்)

தீர்வைத்தொகை: ரூபா 5320 - 00

வட்டி ரூபா 3500/-க்கு 8 வீதப்படி

7-11-68 தொடக்கம் 5-3-69 வரை (4மாதம்) 93 - 33

வட்டி ரூபா 5413-33க்கு 5 வீதப்படி

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: M. B. 8077

1. வேலுப்பிள்ளை கந்தையா

2. அவரது மனைவி அன்னபாக்கியம் இருவரும், காரைநகர்

எதிராக —வழக்காளி:

1. வேலுப்பிள்ளை மாணிக்கம் இராஜசிங்கம்

2 அவரது மனைவி அரியமலர் இருவரும்

ஈச்சமட்டை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 8077-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ம் ஆண்டு யூலை மாதம் 27-ஆம் திகதி (27-7-70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைந் தொகை:—முதல் வட்டி ரூபா பதினுலாயிரத்து எண்ணூற்றிருபதும் (ரூபா 14,820/-) 22 3-66 தொடக்கம் 25-8-67 வரைக்கும் ரூபா பன்னிராயிரத்துக்கு (ரூபா 12,000) 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 466 03

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணப் பகுதி, யாழ்ப்பாண மாவட்டம் சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை 'முதலைக்குளம் வயல்' வயற்பரப்பு 5ம் குளி 8¼ யும், வான் பயிர்களும் கல்வீடும், இதந்துச் சேர்ந்தவைகளும். எல்லைகள்: கிழக்கு எம் கே. சின்னையாவினது மனைவி கிறேஸ் ரஞ்சிதமலரின் ஆதனமும், வடக்கு —றோட்டும், மேற்கு—ஆறுமுகம் பொன்னையாவினது ஆதனமும், தெற்கு பிறன்சீஸ் அலெக்சாண்டர் திசவீரசிங்கத்தின் ஆதனங்களும் அத்துடன் ஞானமுத்துவின் விதவை காலம்சென்ற முத்தம்மாவின் உரிமை ஆதனத்துடன் மற்றவர்களுடையதும்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
நாகேந்திரமடம், மதிப்பாளரும்,
வட்டுக்கோட்டை 13-6-70 எம. 104 26,6-70.

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

1. புலோலி தெற்கு தம்பையா கிருஷ்ணபிள்ளையும்

2 ஷ்டி பெண் பூரணமும

இல: 10795 எதிராக —வழக்காளிகள்

1. அல்வாய் தெற்கு சின்னத்துரை சதானந்தன்
2. ஷ்டி பெண் பரமேஸ்வரி
3. அல்வாய் வடக்கு கந்தையா இராசரத்தினம்
4 அல்வாய் தெற்கு முருகப்பர் வேதவனம்
5. அல்வாய் தெற்கு பெரியதம்பி எரம்பு
6. புலோலி தெற்கு ஆள்வாப்பிள்ளை கார்த்திகேசு
7. அல்வாய் தெற்கு சின்னத்தம்பியார் கந்தையா முத்துலிங்கம்
8. ஷ்டி பெண் புவனேஸ்வரி
9. ஷ்டி கந்தப்பர் சதாசிவம்
10. ஷ்டி தாமர் வீரகத்திப்பிள்ளை
11. ஷ்டி ஆள்வாப்பிள்ளை தம்பையா
12. ஷ்டி மயில்வாகனம் இராஜேந்திரா
13 ஷ்டி மாணிக்கம் நரேந்திரன்
14 ஷ்டி விஞ்சித்தம்பி ஆறுமுகம்
15. ஷ்டி ஆறுமுகம் சின்னப்பு
16. ஷ்டி பெண் சின்னச்சிப்பிள்ளை
17. ஷ்டி V. ஆறுமுகம் கைம்பெண் தெய்வானைப்பிள்ளை
18. ஷ்டி ஆறுமுகம் சின்னையா
19. புலோலி தெற்கு வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை
20. ஷ்டி பெண் நாகம்மா
21. அல்வாய் தெற்கு இளையபிள்ளை ஆறுமுகம்.

—எதிரிகள்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் வீரக்கொடிய குறிச்சியிறை இணவொகலை நில பர 12¾ ஷ்டி தோட்டம் 8 கூடிய நி. பர 23 குளி 7½ என்னும் ஆதனம் 1951-ஆம் ஆண்டின் 16-ஆம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடரந்திருக்கின்றதென்று இத்தாலுமகறிவிக்கப்பட்டிருக்கின்றது

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1970-ஆம் ஞூ ஆனி மீ 29-ஆம் உ காலை 10-00 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி,
வே. அ. நடராசா
1970-ம் ஞூ ஆனி மீ 20 உ பிரதம லிகிதர் / சக்கிடுத்தார்,
எம். 119 26-6-70

6-3-69தொடக்கம 6-6-70வரை 1வருஷம்3மாதம்) 338 - 31

செலவு தொகை 259 - 49

மொத்த ரூபா 6011 - 13

"சிவலிங்க வாசம்" க. நல்லலிங்கம்,
வி. எம் ரோட், ஏலவிற்பனவாளர் & விலைமதிப்பாளர்
பருத்தித்துறை 21-6 70 எம் . 120 26-6-70

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 26—6—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்